1983 பிப்ரவரி 15] [திரு. என். வரதராஜன்]

இறந்துபட்ட அவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு கொடுப்பது குறித்துக் கேட்டார்கள். அவர்கள் விண்ணப்பித்து இருப்பார்களேயானால், அவர்களின் குடும்பச் சூழ்நிலை மற்றவைகளைப் பார்த்து, அவர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ஏதாவது உதவித் தொகை அளிக்கலாமா என்பது பற்றி அரசு தனியாக பரிசீலிக்க வேண்டும்.

(ஆ) பாம்புத் தோல் ஏற்றுமதிக்கு மைய அரசு தடை

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''வெளி நாடுகளுக்குப் பாம்புத் தோல் ஏற்றுமதி செய்வதை மைய அரசு தடை செய்துள்ளதால் அத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் படும் இன்னல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

விஷமுள்ள மற்றும் விஷமற்ற பாம்புகள் மற்றும் பல்லிகள், விவசாயப் பொருளாதாரத்தில் ஆற்றும் சிறப்பான பங்கினையும் இந்த இனங்கள் பெருமளவில் மிகையாகப் பயன்படுத்தப்பட்டதை கருத்தில் கொண்டு, இவற்றின் தோல்களின் ஏற்றுமதிக்கு இந்திய அரசு தடை விதித்தது. 1972-க்கு முன், விஷமற்ற பாம்புகளின் தோல்களின் ஏற்றுமதிக்குத் தடையேதும் இல்லை. பின்னர், அவை கோட்டா முறையின் கீழ்கொண்டு வரப்பட்டன. அடுத்த சில ஆண்டுகளில், அவை படிப்படியாகக் குறைக்கப்பட்டு, 1975—76-ல் தடை விதிக்கப்பட்டது. ஆனால், 1976-ல் விஷமற்ற பாம்புகளின் தோல்களை வணிகம் செய்பவர்களிடமிருந்து, தங்களிடம் அதிகமான அளவில் இருப்பு தேங்கியிருப்பதாக முறையீடுகள் வந்தபடியால், அந்தத் தடையை இந்திய அரசு தளர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவ்வாறு தளர்த்தும்போது, இனிமேற்கொண்டு தளர்த்துதல் இயலாதெனவும், தங்களது இருப்புகள் எல்லாவற்றையும் ஏற்றுமதி செய்வதன் மூலம் தீர்ப்பது அவர்களது பொறுப்பு எனவும் இந்திய அரசு தெளிவுபடுத்தியது.

2. கடந்த காலத்தில், பாம்பு மற்றும் இதர ஊர்வன வகைகளை வேட்டையாடுவதும், கொல்வதும் மிகப் பெரிய அளவில் இருந்துள்ளது. எனவே, இதனால் நாட்டில் இந்த இனங்களின் நிலை வெகுவாக பாதிக்கப்பட்டதுடன், தனிப்பட்ட வணிகர்களிடம், அவற்றின் தோல்கள் தேங்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இத்தகைய தோல்களின் ஏற்றுமதிக்கான தடையை நீட்டிப்பதே இந்திய அரசின் கொள்கை. இக்காரணத்தினாலும், இத்தகைய தோல்கள் வணிகர்களிடம் தேக்க முறாமல் இருப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதும் அவசியமாகிறது.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1983 பிப்ரவரி 15

3. நம் நாட்டின் சில பகுதிகளில் சரியான கண்காணிப்பு இல்லாதபடியால், பாம்புத் தோல்கள் கள்ளத்தனமாக கடத்தப் படுவதாக இந்திய அரசு குறிப்பிட்டு, அத்தகைய கள்ளக் கடத்தலைத் தடுக்க உறுதியான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு மாநில அரசை அறிவுறுத்தியுள்ளது. மேலும், இந்திய அரசு தனது 4—1—1983 நாளிட்ட கடிதத்தில், பாம்புத் தோல்களின் ஏற்றுமதிக்குத் தடை விதித்துள்ளதால், தனியார் வணிகர்களிடம் பாம்புத் தோல்கள் தேக்கமுற்று இருப்பதாகத் தெரிவித்துள்ளது. இத்தகைய தோல்களின் இருப்பில் பெரும் பகுதி, சென்னை மற்றும் கல்கத்தாவிலுள்ள தனியார் வியாபாரி கள் வசம் உள்ளது. எதிர் காலத்திலும் இத்தகைய தோல்களின் ஏற்றுமதியை அனுமதிக்கக் கூடாது என்பது இந்திய அரசின் கொள்கையென்பதாலும், மேலும், தேங்கிக் கிடக்கும் தோல்கள் நம் நாட்டிற்குள்ளேயே விற்கப்படுவதில்லை என்பதாலும், இந்திய அரசு நிறுவனமாகிய பாரத தோல் கழகத்தின் மூலம் இத்தகைய தோல்களை வாங்கச் செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என இந்திய அரசு தெரிவித்துள்ளது. பாரத தோல் கழகம், மதிப்பு மிக்கப் பொருட்களைத் தயாரித்து நம் நாட்டிற்குள்ளேயோ, வெளியிலோ விற்பனை செய்யும் எனக் கருதப்படுகிறது. இதன் முக்கிய நோக்கம், தனியார் வியாபாரி களிடமுள்ள இருப்புகளைத் தீர்ப்பதாகும். வருங்காலத்தில் இத் தகைய தோல்களின் வணிகத்தை முற்றிலுமாகத் தடை செய் வதற்கு சட்டம் ஒன்று இயற்றுவது குறித்துப் பரிசலித்து வருவ தாகவும், இதற்கிடையில் உரிமம் பெற்ற வியாபாரிகளிடம் தேங்கி இருக்கும் தோல்களை வாங்குவதற்கு பாரத தோல் கழகத்திற்கு மாநில அரசு எல்லாவித ஒத்துழைப்பும் நல்க வேண்டுமெனவும் இந்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

4. சென்னையிலுள்ள தனியார் வணிகர்களிடம் தேங்கியிருக் கும் பாம்புத் தோல்கள் குறித்து முடிவு செய்யும் பொருட்டு, இந்திய அரசின் சுற்றுப் புற சூழல் துறை இணைச் செயலாளர் 29—1—1983 அன்று தலைமை செயலகத்தில் வனம் மற்றும் மீன் துறை செயலாளர், வனத்துறை அதிகாரிகள் மற்றும் வனவிலங்கு பராமரிப்பு உதவி இயக்குநர் ஆகியோருடன் விவாதித்தார். விவாதத்தின் போது இந்திய அரசின் இணைச் செயலாளர் கீழ்க் கண்ட கருத்துக்களை வலியுறுத்தினார் :—

(1) பாம்புகளை வேட்டையாடிப் பிடிப்பது அனுமதிக்கப் படக்கூடாது. சட்ட விரோதமான முறையில் அவ்வாறு நடை பெறுவதும் தடுக்கப்பட வேண்டும். சமீப காலத்தில், சென்னை யிலுள்ள தமிழ்நாட்டின் பிற பகுதிகளிலும் சட்ட விரோதமான முறையில் பாம்புத் தோல்களின் வணிகம் நடைபெறுவதாக இந்திய அரசிற்கு அறிக்கைகள் வந்துள்ளன. இது முற்றிலும் தடுக்கப்பட வேண்டும்.

1983 பிப்ரவரி 15] [திரு. ஆர். எம். வீரப்பன்]

(2) பதிவு பெற்ற தனியார் வியாபாரிகள் தங்களிடமுள்ள பாம்புத் தோல்களின் இருப்புகளை பாரத தோல் கழகத்திற்கே விற்பதற்கு வழி வகை செய்யலாம். இந்திய அரசின், உதவி இயக்குநரும், பாரத தோல் கழகத்தின் பிரதி நிதிகளும், தலைமை வன விலங்குக் காப்பாளரிடம் இது குறித்து தொடர்பு கொள்வார்கள்.

(3) அறிவிக்கப்பட்டுள்ள இருப்பினைச் சரிபார்த்தல் அவசியமாகும். இது குறித்து தலைமை வனவிலங்குக் காப் பாளரும் அவரது பணியாளரும் திறமையாகச் செயல்பட வேண்டும்.

இந்திய அரசின் முடிவுகளின்படி, உரிய நடவடிக்கைகள் வனத் துறைத் தலைவர் மற்றும் தலைமை வனவிலங்குக் காப்பாளரால் ஆராயப்படுகிறது. எனவே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப் பிட்டுள்ளபடி, தேங்கியுள்ள பாம்புத் தோல்கள் முழுவதும் பாரத தோல் கழகத்தால் வாங்கிக் கொள்ளப்படும் என்ற காரணத்தால், அத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் கவலையுற வேண்டிய அவசியமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாம்புத் தோல்கள் அதிக அளவில் கள்ளத்தனமாக கடத்தப்படுவதால், அதைத் தடுக்க உறுதியான நடவடிக்கையை மாநில அரசுகள் எடுக்க வேண்டும் என்று மைய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. பாம்பை உயிரோடு பிடிப்பவர் களையோ அல்லது பாம்புத் தோலை கடத்துபவர்களையோ நம்முடைய வனத்துறை அதிகாரிகள் பிடித்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது போன்று சட்டத்தை மீறி பாம்புகளையோ அல்லது பாம்புத் தோல் களையோ சேகரிப்பவர்களை பல நேரங்களிலே வனத்துறையினர் பிடித்து, அவைகளை கைப்பற்றி இருக்கிறார்கள். சமீபத்திலே கூட 3 பேர்களிடத்திலேயிருந்து சுமார் 12 ஆயிரத்து 406 பாம்புத் தோல்கள் கைப்பற்றப்பட்டிருக்கிறது. இக்பால் டேனரி, சுகூர் டேனரி, மணி டேனரி என்று சொல்லக் கூடிய 3 நிறுவனங்களிடமிருந்து 12,406 பச்சைப் பாம்புத் தோல்களைக் கைப்பற்றியிருக்கிறார்கள். இது போன்ற தீவிர நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிற அறிக்கையில் பாம்புகளை வேட்டையாடிப் பிடிப்பது அனுமதிக்கக் கூடாது. சட்ட விரோதமான முறையில் அவ் வாறு நடைபெறுவதும் தடுக்கப்பட வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். இப்படி பாம்புகளை தடையை மீறிப் பிடிப்ப

வர்களை தண்டிப்பதற்காக அரசாங்கத்திற்கு ஏதாவது சட்டம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன். அத்தோடு பாம்பு கடிக்க வந்தால் அதனைக் கொன்றுவிட்டால் அதுவும் தண்டனைக்குரியதாக கருதப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டத்தை மீறி பாம்புகளை கொல்பவர்களுக்கு 2 ஆண்டுகள் வரையில் சிறை தண்டனை வழங்க வேண்டும் என்று சட்டத்திலே வகைசெய்யப்பட்டிருக்கிறது.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பளித்தல்) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பளித்தல்) சட்டமுன்வடிவினை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.